பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆனி: 19 றஜப்: 26 இதழ்: 142

யாழ்ப்பாணம் ங்கட்கிழமை 3-7-78




## உப ஜனுதிபதி வருகிருர்

(கொழும்பு)

ஈராக் குடியரசின உபஜனு திபதி ஜனுப் மஃறூவ் இன்று இலங்கை வருகிருர்.

இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு இங்குவரும் ஈராக் உப ஜனுதிபதி இலங்கை ஜனு திபதி ஜே. ஆர். ஜயவர்த்த னுவையும் பிரதமர் பிரேம தாசாவையும் சந்தித்து பேச் சுக்கள் நடத்துவார்.

# ஜனதா பொதுக் காரியதரிசியும் ராஜினுமா செய்துவிட்டார்!

## ஐக்கியத்தைக் காப்பாற்ற அடுத்தடுத்து கூட்டங்கள்

### ஆளும்கட்சிக்குள் மிகப்பெரும் நெருக்கடி!!

(புதுடில்லி)

ஜனதாகட்சியின் பொதுக்காரியதரிசி திரு. ரவிராஜ் நேற்று பதவியிலிருந்து ராஜினுமா செய்ததன்மூலம், ஆளும் கட்சியில் பெரும் நெருக்கடி இப்பொழுது ஏற்பட்டுள் ளது.

ராஜ்நாராயண், சரண்சிங் மூலம் இந்திய அரசில் உண்டான நெருக் கடி, இப்பொழுது விசுவரூபமெடுத்து, ஆளும்கட்சிக்கே சவாலாகத் தலைதூக்கியுள்ளது! கட்சியின் முக்கிய பதவியான பொதுக்காரிய தரிசி பதவியிலிருந்து ரவிராஜ் ராஜினுமா செய்ததைத்தொடர்ந்து மேலும் சில முக்கியஸ்தர்கள் வெளியேறலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

நேற்று புதுடில்லியில், ஜனதாகட்சி அவசரமாகக் கூடி, நிலைமையை ஆராய்ந்தது. கட்சியின் ஐக்கியத்தைக் காப்பாற்ற பல மட்டங்களில் இரகசியக் கூட்டங்கள் நடைபெற்றன. கட்சித்தலைவர் திரு சந்திரசேகரும் வெளிவிவகார அமைச்சர் அடல் பிஹாரி வாஜ்பாயும் பல சந்தர்ப்பங் களில் கூடி, கட்சியில் தோன் றிய நெருக்கடி நிலைபற்றி விரி வாக ஆராய்ந்தனர். இதனைத் தொடர்ந்து இவர்கள், பிரத மர் திரு. மொரார்ஜி தேசா யைச் சந்தித்ததாக கடைசி யாக கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

''கட்சியின் கட்டுக்கோப் பைக் குலைக்கின்றவர்கள்'' என்று கருதப்பட்ட திரு.ராஜ் நாராயணும், திரு. சரண்சிங் கும் இரண்டு தினங்களுக்கு முன்னர் ராஜினுமாச் செய்த னர். இதனைத் தொடர்ந்து ஐந்து 'காபினட்' அமைச்சர்கள் ராஜினுமா செய்தனர். நேற்று, கட்சி யில் முக்கிய பதவி வகித்த பொதுச் செயலாளர் திரு. ரவிராஜும் ராஜினுமாசெய்து விட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ராமமூர்த்திக்கு கௌரவப்பட்டம்

சென்னை, ஜூலை 2

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்திக்கு அமெரிக்காவிலுள்ள பிரபல நரம்பியல் நிறுவனம் கௌர வப்பட்டம் வழங்கியுள்ளது. உலகிலேயே ஒருசிலருக்குத் தான் இந்த நிறுவனத்தின் கௌரவம் கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## "புதிய அரசியலமைப்பில் ஜனநாயக ரீதியில் வாக்களிப்பு இடம்பெறும்"

– பிரதமர் பிரேமதாசா

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஜனநாயக முறை யில் வாக்களிப்பு இடம் பெறும்' என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா கொட்டியாகலையில் நடை பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினுர்.

பிரதமர் மேலும் கூறிய தாவது:

"புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்படி ஜனுதிபதி தேர்தலில் 50 சதவீத வாக்கு களைப் பெறுவோரே ஜனுதி பதியாக வரமுடியும். பாராளு மன்றத்தில் அதிக வாக்குக ளைப் பெறுவோரே பிரதம ராக வரமுடியும்.

இத்திட்டத்தின்படி உத்தி யோகபூர்வ கட்சிகள் அரசி யல் வாதிகள், அதிகாரிகள் அநீதி இழைப்பின் அவர்களு க்கு எதிராக வழக்குத் தொடர வாய்ப்பளிக்கப்படும், என்றும் பிரதமர் சொன் னுர். (உ)

அந்நியச் செலாவணி மோசடி:

## 3 வருடமாகத் தேடப்பட்ட நபர் சென்னையில் கைது!

சென்னை, ஜூலை. 2

அரசாங்கத்தின் கண்ணில் மண்ணைத்தூவி, பல லட்சக் கணக்கான ரூபா அந்நியச் செலாவணி மோசடி புரிந்த ஆர். வெங்கடாசலம், இன்று சென்னையில் கைதுசெய்யப் பட்டார்.

சிங்கப்பூரிலிருந்து சென் னைக்கு பணம் அனுப்பிவைப்ப தில் இவர் ஒரு'ஸ்தாபனமாக' இயங்கினுரென்றும், பலபெயர் களில் சிங்கப்பூரிலிருந்து தமிழ் நாட்டுக்கு பலரது பணத்தை யும் அனுப்பிவைத்தார் என் றும் கூறப்படும் இந்த நபர் கடந்த மூன்று வருட காலமாக தலைமறைவாகத் திரிந்தாராம்.

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்தபோது சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் சுங்கப்பகுதியினரின் கைகளில் சிக்கி பொலிசாரிடம் ஒப் படைக்கப்பட்டிருக்கும் வெங் கடாசலம் பட்டுக்கோட்டை யைச் சேர்ந்தவராகும்.

## "சரண்சிங் ராஜினுமா இந்திராவுக்கு வலுவூட்டாது"

– ஜெகஜீவன்ராம்

கல்கத்தா, ஜூலை 2

''திரு. சரண்சிங்கும் மற் றும் சிலரும் ராஜினுமாச் செய்ததால் ஜனதாக்கட்சி பாதிக்கப்படவில்லை. கட்சிக் குப் பிரச்னை எதுவும் இதனால் எழவில்லை'' என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராம் கூறியுள்ளார்.

கல்கத்தாவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னுர்.

''திரு. சரண்சிங்கும் குறிப் பிட்ட சிலரும் கட்சியிலிருந்து விலகாதபோது எப்படி கட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

# கொழும்புபேராயர் நாளையாழ்விஜயம்

## பெருவரவேற்பளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மறைமாநிலத் தின் பேராயர் பேரருட் திரு கலாநிதி நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணுண்டோவிற்கு நாளை மாலை யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மக் கள் யாழ். ஆசனக்கோயில் முன்றலில் பொது வரவேற் பொன்றை அளிக்கின்றனர்.

இவ்விழாவிற்கு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு கலாநிதி வ. தியோகுப் பிள்ளை தலைமை வகிப்பார். மன்னுர் தேசிய பேரவை உறுப்பினர் திரு. சூ. சூசை தாசன் சிறப்புரை நிகழ்த்து வார். வரவேற்புரையை யாழ். ஆயர் வழங்குவார். கொழும் புப் பேராயரின் பதிலுரை யைத் தொடர்ந்து கலைநிகழ்ச் சிகள் நடைபெறும்.

இவ் விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் கவனித்து வருகின்றுர். (கெ)

# ஐம்பது ரூபா: படிவங்கள் இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)

அரசு வழங்கும் ஐம் பதுரூபா ஆதாரப்பணம் பெறத் தகுதியுடையோ ருக்கு, இன்று விண் ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

இந்தப் படிவங்களை இன்று முதல் வெள்ளிக்கிழமை வரை கூட்டுறவுக் கடைகள் மூல மாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இது குறித்து திட்ட அமு லாக்க அமைச்சு அதிகாரி ஒரு வர் தெரிவிக்கையில், அரசு வழங்கும் ஐம்பது ரூபா ஆதா ரப்பணம் பெறத் தகுதியுடை யவர்கள், இந்தப் பத்திரங்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

30 வருட பலாமரங்கள் 8 உடனடியாக விற்பனைக்குண்டு. திருமதி ந. சீவரத்தினம், 'அம்பிகைவாசா', பார்மணியம் ஒழுங்கை, தெல்லிப்பழை. 9725

25 சிறீ 8316 மசி பெர்குசன் (Massey Furgusion) மிசின் மாத்திரம் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு கொள்க. டாக்டர் K. பூலோகசுந்தரம், 361, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9720

### தேவை

மின்சாரம், தண்ணீர் விநியோகம் உட்பட சகல நவீன வசதிகளும் கொண்ட விசால மானவீடு ஒன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லது அதற்குச் சமீபமாக கொழும்பிலுள்ள தனியார் அபிவிருத்தி நிறுவனமொன்றின் கிளை அலுவலகத்திற்குத் தேவை. மாதவாடகை, முற்பணம் ஆகிய சகல விபரங்களையும் அறிவித்து தபால் பெட்டி எண் 16, தெகிவளை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 9696

டாக்ரும் வேலை செய்யக் கூடிய நல்ல அனுபவம் வாய்ந்த பிரிண்டர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும், 'லக்கி போட்டோ' மன்னார். 9706

ந. யோகசிகாமணி
எல். எல். பி.
சட்டத்தரணி
தொண்டமானாறு

### அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று

காலம்சென்ற வல்வெட்டித்துறை சின்னத்துரை அருளம்பலம் என்பவரின்மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

சின்னத்துரை அருளம்பலம் காலமெய்தியவர்.

அருளம்பலம் கைம்பெண் பவளரெத்தினம் வல்வெட்டித்துறை.
--மனுதார்.

மரண சாதன நியாயாதிக்கம்; இல. T 1048

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரண சாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆடி மாதம் 28ஆம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்டபின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுகப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றின் கட்டளைப்படி,
க. விஸ்வலிங்கம்
பதிவாளர்.

1978ம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் நாளளவில் தேதியிடப்பட்டுளது. 9688


"அபிவிருத்தித் திட்டங்கள்:

# அரசின் பணம்தானே என்று வீணாக்க எண்ணாதீர்"

## -- தா. திருநாவுக்கரசு எம். பி.

(சங்கானை)

''பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கம், எமக்குத் தருகின்ற பணத்தைப் பூரணமாகப் பயன்படுத்தி, அபிவிருத்தி வேலையை உறுதியாகச் செய்யவேண்டும். இந்த விடயத்தில் கிராமசேவகர் பிரிவுகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள கூட்டணிக் கிளைகள் அவ்வப் பகுதியில் செய்கின்ற அபிவிருத்தி வேலைகளைப் பொறுப்புடன் பார்வைசெய்தல் அவசியம்.''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு, சித்தன் கேணிப் பணிமனையில், கூட்டணிக் கிளைப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ''அரசாங்கம் தரும் பணந்தானே என்று பொறுப்பில்லாமல் நடந்து, பணத்திற்கேற்ற அபிவிருத்தி செய்யாது வீணடிப்பது நாட்டுக்கும், நமக்கும் நஷ்டமேற்படுத்துவதாகும்.

மட்டக்களப்பில் அண்மையில் நடந்த மாநாட்டில் 'தொகுதிகளும் அங்கத்துவமும்' என்ற தலைப்பில் எமது தொகுதி அங்கத்தவர்கள்மிகக் குறைவாகவும் வவனியாத் தொகுதி அங்கத்துவம் எமது தொகுதியைவிட மூன்று மடங்கு மேலானதாகவிருந்தது. எமது தொகுதியில் 72 ஆயிரம் மக்கள், 42 ஆயிரம் வாக்காளர் இருந்தும் இதில் 10 வீதமானோர்கூட அங்கத்தவர்கள் ஆவதற்கு அக்கறை கொள்ளவில்லை என்னும் பொழுது எமக்கு வருத்தமாகவிருக்கிறது.

சிலருக்கு எமது இயக்கத்தில் மிக ஈடுபாடு இருந்தும் எமது இயக்கத்தில் அங்கத்துவம் பெறவேண்டும் என்பதன் தாற்பரியம் தெரியாமல்இருக்கலாம் கிளைக்குழுக்கள் இது பற்றி ஆதரவாளரிடையே விளக்கிப் பிரசாரம் செய்தால் கணிசமான தொகையினர் அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்வர்.

வவனியா ஆவரங்கால் மாநாடுகளுக்கு பிரதிநிதிகள் அங்கத்தவர் தொகைக்கேற்ற வகையிலேயே அமையும் என்றும் அதைப்பற்றிய விளக்கங்களையும் கூறி ஒவ்வொரு கிளையும் 2?0 அங்கத்தவர்களுக்குக் குறையாமல் சேர்த்து ஜூலை மாதம் 5-ம் திகதிக்குப் பிந்தாமல் காரியாலயத்தில் விண்ணப்பங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சாவகச்சேரியிலிருந்து சுழிபுரம் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்சை சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கும் சென்று செல்வதற்கான ஒழுங்குகளை செய்துதரும்படி பிரதிநிதிகள் கேட்டதற்கிணங்க அவர் மிக விரைவில் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் இதனால் சுளிபுரம், தொல்புரம், பண்ணகம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, கந்தரோடை பகுதிகளின் நோயாளர் பெரிதும் பயன்அடைவர் என்பதையும் தாம் உணர்வதாகவும் சொன்னர். (உ)

## "மூன்மாதிரிக் கிராமமாக்குக"

[நெல்லியடி]

கரணவாய் வடக்கு கிராமத்தை முன்மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யும்படி கரவெட்டி உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கரணவாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

## நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. தம்பிராசா சிவநாதன் சமாதான நீதிவானக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1952 ம் ஆண்டு மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரி ஆய்வுகூட உதவியாளராகக் கடமையாற்றிய இவர் 1963 ம் ஆண்டு கட்டாய சிங்களப் போதனை சட்டத்தினல் ஓய்வு பெற்றுக்கொண்டார்.

1970 ம் ஆண்டு மட்டக்களப்பு நகராட்சிமன்ற 4 ம் வட்டாரத்தின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு 1971 ம் ஆண்டு ராஜினமாச் செய்து மட்டக்களப்பு நகர பிரதேச திடீர் மரண, மரண விசாரணை அதிகாரியாக நியமனம் பெற்றார். 1978 ம் ஆண்டு ஜனவரி மாதம் ரத்துச் செய்யப்பட்டிருந்த மேற்படி பதவி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. இவர் சிறந்த மக்கள் தொண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுபோதையில்

## வீதியில் படுப்பவர், கார் மோதி மூளை சிதறி மரணம்

(பண்டத்தரிப்பு)

மதுவெறியில் அடிக்கடி வீதியில் படுக்கும் வழக்கமுடைய நபர் ஒருவர் இரவு நேரத்தில் பிரதான வீதியில் மதுவெறியில் மயங்கிய நிலையில் படுத்திருந்தபோது வேகமாக வந்த கார் ஒன்றினல் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே பலியான பரிதாப சம்பவம் வட்டுக்கோட்டையில் நடைபெற்றுள்ளது.

வட்டு. மேற்கைச் சேர்ந்த காசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்னும் பிரஸ்தாப நபரின் மரண விசாரணையை பண்டத்தரிப்பு பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸ் அத்தனசியார் நடாத்தினர். இறந்தவர் அடிக்கடி குடிவெறியில் மயங்கிய நிலையில் றேட்டில் படுத்திருப்பது வழக்கமென்றும், சம்பவதினம் இரவு இப்படி மது அருந்திவிட்டு மயங்கிய நிலையில் வட்டுக்கோட்டை-காரைநகர் வீதியில் படுத்திருந்தாரெனவும், அப்போது அவ்வீதியால் வேகமாக வந்துகொண்டிருந்த கார் ஒன்று அவரை மோதிவிட்டு நிற்காது சென்று மறைந்துவிட்டதாகவும் சாட்சியங்கள் மூலம் அங்கு தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை நடத்திய வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் கே. மரணன் கார் மோதியதினல் மூளை சிதறியதனல் ஏற்பட்ட மரணம் என்று தெரிவித்ததையடுத்து விபத்து மரணம் என்று தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி சம்பந்தப்பட்ட காரைத் தேடி கண்டு பிடிக்குமாறு உத்தரவிட்டார். சங்கானை பொலிசார் இதையிட்டு தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (உ)


## பகிரங்க ஏலவிற்பனை

### உழவு இயந்திரம்

வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவிப்பிலுள்ள இங்கிலாந்து மொடல் 36 ஸ்ரீ 405 என்னும் இலக்கத்தையுடைய மசீவ் பேர்குசன் 135 டீசல் உழவு இயந்திரம் பெட்டியுடனும் புதிய கலப்பையுடனும் 20-07-78 அன்று காலை 10 மணிக்கு தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பார்வையிட விரும்புபவர்கள் 14-7-78 தொடக்கம் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். மேலும் விபரங்களுக்கு தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெட்டி இல 44 ஸ்ரீ 5460
நிறை 15 அந் 2 கு 14 இரு
எஞ்சின் நிறை 28 அந் 1 கு 00 இரு

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு வட பகுதி
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

9727

## அறிவித்தல்

அச்சுவேலி
கூட்டுறவுப் பாண் சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)
பதிவு இல. J 1391
திகதி; 20-02-1957

### கேள்விப் பத்திரம்
(Tender)
சங்கக் கட்டடம்
அமைத்தல்

மேற்படி சங்கத்திற்கு சங்கக் காரியாலயமும் பாண் பேக்கரியும் நிறுவுவதற்கு 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12-00 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏறக்குறைய ரூ. 75,000/- பெறுமதியான கட்டடம் நிறுவப்படவேண்டும், அரசாங்க கூட்டுத்தாபன பகுதிகளில் ரூபா 150,000வுக்குக் குறைகுறையாத கட்டட நிர்மாணத்திற்கெனப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கலாம்.

கேள்விக் கட்டணமாக ரூபா 250/-யும் கேள்விப்பத்திரத்துக்கென ரூ. 3/-யும் சங்கத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுகளை 14-7-78-ந் திகதிக்கு பிந்தாமல் பெற்றுகொள்ள வேண்டும்.

கேள்விப்பத்திரத்துக்குரிய விபரங்கள் (Bill of Quantities) முதலியன எழுத்து மூலமோ நேரிலோ சங்கக் கந்தோரில் பெறவும். சங்கத்தின் காரிய முகாமைச்சபை ஏற்றுக்கொள்ளாத ஒப்பந்தகாரர்களின் கேள்விக் கட்டணப் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

இ. வே. இராமசுவாமி,
தலைவர்,
அச்சுவேலி கூட்டுறவுப்
பாண் சங்கம்.

அச்சுவேலி,
திகதி: 29-6-78. 9700


விளையாட்டுத்துறையில்

## 'ஆழிக்குமரன்' ஆனந்தன் சவால்

(கொழும்பு)

பாக்குநீரிணையை இரண்டு தடவை நீந்திக்கடந்துசாதனை நிலைநாட்டிய 'ஆழிக்குமரன்' வி.எஸ்.குமார்ஆனந்தன்புதிய சவால் ஒன்றினை விளையாட்டுத் துறையில் விடுத்துள்ளார்.

சாவாலை ஏற்று வெற்றிபெறுபவர்கள் ஒரு லட்சம் ரூபா சன்மானம் பெறலாம்.

பிரபல இரத்தினக்கல் ஏற்றுமதியாளர் ஜனப் ஏ. ஏ. எம். மௌஜூத் உத்தரவாதமளிக்கின்றார்.

திரு. ஆனந்தன் பத்து நிகழ்ச்சிகளைத் தெரிவித்து இவற்றில் ஆறு நிகழ்ச்சிகளில் தம்மை வெல்லுபவர் ஒரு லட்சம் பெறுவார் என்றும் ஐந்தில் வெற்றி காண்பவர் 25 ரூபா பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இப்போட்டி நிகழ்ச்சிகள் இம் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகி டிசம்பரில் முடிவடையும். போட்டியிட எவரும் முன்வராவிட்டாலும் திரு. ஆனந்தன் இந்நிகழ்ச்சிகளைநடத்துவார்.

அனைத்துலக அடிப்படையில் இப்போட்டி நடைபெறுகிறது.

இடைவிடாது சைக்கிள் ஓடுதல், இடைவிடாது மோட்டார் செலுத்துதல், இடைவிடாது நீந்துதல், இடைவிடாது நடத்தல் என்பன போட்டி நிகழ்ச்சிகளில் சிலவாகும். (உ)

## நல்லூரில் இன்று பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தென்இந்திய நாதஸ்வர வித்துவான் பந்தநல்லூர் தட்சணமூர்த்தி இன்று நல்லூரில் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கிறார். அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம், யாழ். இசைக் கலைஞர்கள் மற்றும் கலாரசிகர்கள், வர்த்தகப் பெருமக்கள் ஒன்றிணைந்து அளிக்கும் இப்பாராட்டுவிழா நல்லூரிலுள்ள யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று மாலை யாழ்ப்பாண நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

சங்கீத வித்துவான் திரு. ராம். குமாரசாமி நாதஸ்வர வித்துவான் திரு. என். கே. பத்மநாதன், தவில் வித்துவான் கே. கணேசபிள்ளை இளங்கலைஞர் மன்றத் தலைவர் திரு. பொன். சுந்தரலிங்கம் ஆகியோர் பாராட்டுரைவழங்குவர். வர்த்தகப் பிரமுகர் திரு. எஸ். சின்னத்துரை திரு. தட்சணமூர்த்திக்குப் பொன்னடை போர்த்துவார்.

திரு. தட்சணமூர்த்தியின் விசேஷ கச்சேரியும் இடம் பெறும். திரு. என். கே. பதமநாதன் இணைந்து நாதஸ்வரம் வாசிப்பார். திரு. கே. கணேசபிள்ளை, திரு. என். குமரகுரு ஆகியோர் தவில் வாசிப்பர். (அ)


## காவல் ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு உடனடியாகப் பாதுகாவல் செய்வதற்கு ஆட்கள் (Security Guards) தேவை. விண்ணப்பிக்கவும்: முகாமையாளர், சீ. எஸ். கே. ஸ்தாபனம், 11, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 9726

திரு. சண்முகதாசன்

# "பரந்த ஐக்கிய முன்னணி ஏற்படுவதை மூர்க்கமாக எதிர்த்தார்"

## சமால் த சில்வா - கே. ஏ. சுப்பிரமணியம் அறிக்கையின் முழுவிபரம்

(யாழ்ப்பாணம்)

நடுநிலை சக்திகளை வென்றெடுத்து ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்புவதன் மூலம் பிரதான எதிரிகளை தனிமைப்படுத்தவேண்டுமென்பதை திரு. சண்முகதாசன் மூர்க்கத்தனமாக எதிர்த்தார் என்று திரு. சமால் தசில்வாவும், திரு. கே. ஏ. சிப்பிரமணியமும் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள நேர்மையான கம்யூனிஸ்டுக்களை சண்முகதாசனின் எதிர்புரட்சிகர மார்க்க சீர்குலைவுத் தலைமையை நிராகரித்து இலங்கைப் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறைக்கு ஏற்ப மாக்ஸிச லெனினிஸ மாசேதுங் சிந்தனையின் சர்வதேச உண்மைகளை சரிவரப் பிரயோகித்து தேசிய ரீதியில் ஒரு பலம் மிக்க கம்யூனிஸ்ட் கட்சியாக கட்டியெழுப்பமுன் வருமாறு அழைப்பு விடுகின்றோம். இந்த நோக்கத்திற்காக கட்சியின் மத்தியகுழு பிரதேசக்குழுக்கள் மற்றும் பொறுப்புதாரி ஊழியர்கள் ஏனைய அங்கத்தவர்கள் சார்பில் தோழர் சமால் த சில்வா, கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோரால் கூட்டப்படவிருக்கும் விசேட காங்கிரசில் அணிதிரளுமாறு அழைப்பு விடுகின்றோம்.

சண்முகதாசனின் சீர்குலைவுத் தலைமை எதிர்ப் புரட்சிகர மார்க்கத்தை நிராகரிக்குமாறு நாம் கோருவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) எமது கட்சியின் தத்துவ வழிகாட்டியான மார்க்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனையை கைவிடும் முதற்படியாக தலைவர் மாஓவினுல் முன்வைக்கப்பட்ட மூன்று உலகக்கோட்பாட்டை ஒரு பிற்போக்கான கோட்பாடென சண்முகதாசன் கண்டித்தார். இந்தக்கோட்பாட்டை நிராகரிக்கத் தீர்மானித்தபின் அவர் பிற்போக்குப் பத்திரிகை மூலமாகவும், பிற்போக்கு வாதிகளின் உதவியுடனும் மாபெரும் சீனக் கம்யூனிஸ்ட்கட்சிக்கு எதிராகவும் சீனமக்களுக்கெதிராகவும் ஒரு கீழ்த்தரமான பிரசாரத்தை மேற்கொண்டார். இதன் மூலம் அவர் சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவி செய்கிறார்.

(2) எமதுகட்சிபதிரோராவது காங்கிரசின் முடிவுகளுக்கும் ஜனநாயக மத்தியத்துவ கொள்கைகளுக்கு விரோதமாகவும் சண்முகதாசன் தனது நெருக்கிய சகபாடிகளின் உதவியுடன் தனது எதிர்ப்புரட்சிகர சீர்குலைப்பு மார்க்கத்தை கட்சி மீது திணிக்கும் நோக்கத்துடன் அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட கட்சியின் விசேட மகாநாட்டில் மிகப்பெரும்பான்மையான பிரதிநிதிகள் கலந்து கொள்வதைத் தடைசெய்தார். அவரதுஎதிர்புரட்சிகர மார்க்கத்தை எதிர்த்தவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை பல்வேறு கட்சிக்கிளைக்கும் அனுப்புவதை வேண்டுமென்றே தாமதித்தார். தனது நாசகார நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்காக மகாநாட்டில் கிறெடென்சியல் றிப்போட்டை சமர்ப்பிக்கத் தவறினர்.

(3) சண்முகதாசனின் பதினன்கு வருட கால தலைமை வெகுஜனங்களுக்கு தலைமைதாங்கக்கூடிய ஒரு சக்திமிக்க கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்பத்தவறிவிட்டது. அவரது ஒரு முனைவாத சீர்குலைவுவாத எதிர்ப்புரட்சிகர மார்க்கம் மக்களினதும் நாட்டினதும் பொது எதிரிகளுக்கு எதிராக ஒரு பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக விருந்தது. தான் மட்டுமே ஒரேயொரு புரட்சிகர சிந்தனையாளர் ஒரேயொரு இடதுசாரி, ஒரேயொரு புரட்சிவாதியென பீற்றித்திருந்தார். அவரது ஒரு முனைவாத கதவடைப்புவாதம் மிகப்பெரும் பான்மையான மக்களை பொதுமக்களை பொது எதிரிகளுக்கு எதிராக ஐக்கியப்படுத்தும் சகல முயற்சிகளுக்கும் தடையாய் இருந்தது. நடுநிலை சக்திகளை வென்றெடுத்து ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்புவதன் மூலம் பிரதான எதிரிகளை தனிமைப்படுத்தவேண்டுமென்பதை அவர் மூர்க்கத்தனமாக எதிர்த்தார். உண்மையில் அவரது தாக்குதல்கள் யாவும் இடைநிலை சக்திகளையே குறிவைத்ததன் மூலம் பிரதான எதிரிகளுக்கு உதவிசெய்தார்.

4. தமிழ் பேசும் மக்களின் தேசியஇனப் பிரச்னையைமார்க்சிசம் - லெனினிசம்- மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் அணுகுவதற்குப் பதிலாக பிரச்னையை அவர் புத்தகவாத, ஒருமுனைவாத நிலையியல் அணுகியதால் ஆயிரம் ஆயிரம் சிங்கள - தமிழ் வாலிபர்களைத் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் அவர்களது நியாயமான அபிலாசைகளுக்கான போராட்டத்தில் தேசிய ரீதியில் ஐக்கியப்படுவதற்குத் தடையாய் இருந்ததன் மூலம் மக்களின் புரட்சிகர ஏகாதிபத்திய விரோத இலட்சியத்திற்குத் துரோகமிழைத்தார்.

5. தனது சொந்த நலன்களைக் கட்சியின் நலன்களுக்கு மேலாக வைத்தன்மூலமும் பொதுச் செயலாளர் பதவிவை துர்பிரயோகம் செய்ததன் மூலமும் அவர்கட்சிக்கு ஊறுவிளைவித்து சீர்குலைத்தார் விமர்சனங்களை சகித்துக் கொள்ளமாட்டாத அவர் நேர்மையான சுயவிமர்சனத்தைச் செய்ய மறுத்துவந்துள்ளார். சண்முகதாசனின் பூர்சுவா நிலைப்பாடு கட்சியின் முன்னேற்றத்தைத் தடை செய்வதுடன் கட்சி மிகச் சிறந்த முறையில் மக்களுக்குச் சேவைசெய்ய முடியாமற் போய்விட்டது.

6. சண்முகதாசன் தனது வெளிநாட்டுப் பயணங்கள் மூலமும், வேறு வழிகள் மூலமும் கட்சியின் மத்திய கமிட்டிக்கு தெரியாமல் தனது சொந்த சீர்குலைவு, எதிர்ப் புரட்சிகர மார்க்கத்தை சர்வதேசரீதியாக தோழமைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் மத்தியில் பிரச்சாரம்செய்து அவர்றிற்கிடையே கருத்துவேறுபாடுகளை ஏற்படுத்த முயற்சி செய்தார். இதன்மூலம் எமது கட்சியை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து தனிமைப் படுத்தினர்.

7. சண்முகதாசன் செங்கொடியை அசைப்பது செங்கொடியை எதிர்ப்பதற்கு அவர் தலைவர் மாஓ-வை மேற்கோள் காட்டும் அதேவேளை மா-ஓ-சேதுங் சிந்தனையை நிராகரிக்கின்றார். புரட்சிகர சுலோகங்களை உச்சாடனம் செய்து கொண்டு அவர் பிற்போக்கு வாதிகளுடன் குலவி முற்போக்கு வாதிகளை எதிர்க்கிறார். சாராம்சத்தில் சண்முகதாசனின் மார்க்கம், கொள்கைகள், நிலைப்பாடு என்பன எதிர்ப்புரட்சிகரமானது.

கட்சியின் விசேட காங்கிரஸ் விரைவில் இடப்பெறும். காங்கிரசைக் கூட்டும் தயாரிப்புக் குழு காங்கிரஸ் நடக்கும் திகதி இடம் என்பனவற்றை அறிவிக்கும்.

தயாரிப்புக்குழு கட்சிக்கிளைகளின் கலந்துரையாடலுக்கு விசேட காங்கிரசிற்கு சமர்பிக்கும் தேசிய சர்வதேச நிலை பற்றிய நகல் அறிக்கையையும் நகல் அமைப்பு அறிக்கையையும் அனுப்பிவைக்கும்.

---

அரசியல் சமூக பொருளாதார

# துறைகளின்மதத்தின் பங்கு அளப்பரியது'

## உடுப்பிட்டி இராசலிங்கம் கருத்து

(நெல்லியடி)

"மக்களுக்கு மதம், அபின் போன்றது என்ற கருத்து மாறி, மக்களுக்கு மதம் அவசியமானது என்றதொரு நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் மதத்தின் பங்கு அளப்பரியதாகும்."

இவ்வாறு உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சபையினரால் கொண்டாடப்பட்ட 161வது ஆண்டுப் பூர்த்தி விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வண. சகோதரர் கிங்ஸ்லி முத்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'புதிய-மனிதன் - புதிய சமுதாயட' என்ற விடயம் பற்றி திரு. த. இராசலிங்கம் சிறப்புரையாற்றினர்.

திரு. த. இராசலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

"கிழக்குத் திசையில், சூரியோதயம் ஏற்படுவதுபோல, உலகிலுள்ள முக்கியமான நான்கு மதங்களான இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்கள் உலகின் கிழக்குக் கோடியிலேயே உதயமாகி மேலைநாடுகளில் பரவின. உலகிலே இன்று பாரிய பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல, பல பிரச்னைகளும் தோன்றியுள்ளன. இச்சமயத்திலேதான் விஞ்ஞானமா? மெஞ்ஞானமா? என்ற கருத்துக்கள் மோதுகின்றன. மேலைநாடுகள் விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டே பிரச்னைகளைத் தீர்க்க முயலுகின்றன. இந்நிலை மனிதனை இயந்திரமயமாக்குகிறதே யொழிய, அன்பை-பண்பை போதிப்பதாக அமையவில்லை. கீழைத்தேச நாடுகளில் ஆத்மீகநெறி முன்வைக்கப்பட்டுள்ளது. ஆத்மீக நெறி, மக்களை நல்வழியில் அழைத்துச் செல்லவும், பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்கவும் ஏற்ற சாதனமாகும். ஆத்மீக நெறி அன்பை, பண்பை, கடமை உணர்ச்சியை வெளிப்படுத்துவதால் அல்லது போதிப்பதனுல் புதிய மனிதனை உருவாக்கமுடியும். ஆகவே புதிய மனிதனை உருவாக்குவதற்கு மதமும் அதன் கோட்பாடுகளுமே அத்தியாவசியமாகும்.

### இனம் வாழ கல்வி வழிகாட்டுகிறது

புதிய மனிதன்' மனிதனுக வாழ, தன்னைப் பெற்ற நாடு வாழ, இனம் வாழ, வழிகாட்டுவது கல்வியாகும். இக்கல்வி இன்று சூழ்நிலைகளால் பயனற்றுப் போயிருக்கலாம். ஏட்டுச் சுரைக்காய் போன்று கல்வியின் நிலை மாறிவிட்டதோ என எண்ணத்தோன்றுகின்றது. கல்வியினது நிலைபற்றிக் கூறப்போனுல், இன்று பண்பை வளர்ப்பதில் தவறிவிட்டதென்றே கூறவேண்டும் மனிதப் பண்புகள் கீழிறங்கக் கூடாது. அதனைப் போன்று கல்வியின் நோக்கங்களும் மாறுபடாது பண்புகளை வளர்த்து, புதிய மனிதனை உருவாக்குதல்வேண்டும்."

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

"மனிதனுக்கு ஒழுக்கம் கட்டாயமானது. ஒழுக்கமற்ற சமுதாயம் உலகில் வாழமாட்டாது. ஆதலால் அமையப் போகும் புதிய சமுதாயத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## மேலும் ஒரு உப்பளம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேலுமொரு உப்பளத்தை நிறுவ தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படும்.

தற்போது 70 ஆயிரம் தொன் உப்பு ஏற்றுமதிக்காக கூட்டுத்தாபனத்திடம் மேலதிகமாக உள்ளது. நைஜீரியாவும் மாலைதீவும் பெருமளவில் இலங்கையிலிருந்து உப்பை வாங்கவிருக்கின்றன. தொன் ஒன்றுக்கு 170 ரூபா வீதம் இந்த நாடுகள் உப்பை வாங்குமென்று கூட்டுந்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

---

## கண்பார்வை இழத்தலைத் தடுக்க மகாநாடு

(கொழும்பு)

கண்பார்வை இழத்தலைத் தடைசெய்வது தொடர்பாக ஒக்ஸ்போர்ட்டில் நடைபெறவுள்ள முதலாவது பொது மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகளாக பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் ஆர். பரராஜசேகரம் கலந்துகொள்கிறார். இவர் கடந்த செவ்வாய் இரவு லண்டன் பயணமானர்.

இம்மாதம் 7-ம் தேதி ஆரம்பமாகும் இந்த மூன்றுநாள் மகாநாட்டில் டாக்டர் பரராஜசேகரம், தெற்காசியநாடுகளில் கண்பார்வை இழத்தலினின்றும் பாதுகாப்பளித்தல் என்பது தொடர்பான கட்டுரை ஒன்றையும் சமர்ப்பிப்பார்.

13-ந் தேதியிலிருந்து 15-ந் தேதி வரை ஒக்ஸ்போர்ட்டில் நடைபெறவுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் இவர் தற்காலிக ஆலோசகராகக் கலந்துகொள்வார். (ம)

---

# "தீர்க்கமானசிந்தனையின் பின்பே செயலில் இறங்க வேண்டும்"

## 'அமிர்' அறிவுரை

(சுழிபுரம்)

"நாம் ஒரு காரியத்தை ஆற்றுமுன் அதுபற்றித் தீர்க்கமாக ஆலோசித்து முடிவு செய்வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பெற்றோர் தின விழாவில் பேசுகையில் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. எம். நவரத்தினம் விழாவிற்குத் தலைமைவகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;-

'உயர்வும் தாழ்வும் கொண்டதேவாழ்க்கை. தமிழ் பேசும் இனம் சோதனையும், வேதனையும் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கும் இவ்வேளையில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ஆழ்ந்து தீர்மானித்து நாம் ஓர் தீர்க்கமான முடிவுக்கு வந்துள்ளோம். இம்முடிவே எமது இறுதி முடிவாகவுள்ளது. இனி நாம் இவற்றிலிருந்து மாறமாட்டாதவகையில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். நாம் ஒரு காரியத்தைச் செய்யுமுன் தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும்.'

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், "படசாலைகளை பெருமையடைய கல்வி கற்கும் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். எனது கணவர் இப்பாடசாலையிப் கல்வி கற்ருர் என்பதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்" என்ருர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில்,

"பெற்ருேர் ஆசிரியர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். எவ்வித சிக்கலுக்கும் இடம் இல்லாத வகையில் பாடசாலையைஇயங்கச் செய்ய வேண்டியது எங்கள் கடமையாகும். இப்பாடசாலையின் பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டம் விரைவாகநடைபெற அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ருர்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா பேசுகையில், பெற்ருர்கள் வருடத்தில் ஒருமுறை பாடசாலைக்கு வந்து போவது தான் என்று கருதாமல் பிள்ளைகளின் கல்வியில் கவனம் எடுத்து ஆசிரியர்களுடன் தொடர்புகொண்டு வரவேண்டும். அப்போது தான் பாடசாலை வளர்ச்சியடையும் பெற்ருர் ஆசிரியர் நல்லுறவே பாடசாலையின் வளர்ச்சியாகும்" என்ருர்.

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு. செ. ஸ்ரீநிவாசன் பண்டிதர் அ. ஆறுமுகம் உட்பட மற்றும் பலர் பேசினர். பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிளும் நடைபெற்றன. (உ)

# "நாடு தழுவிய பரந்த இயக்கம் ஆரம்பிப்பேன்'

## சரண்சிங் அறிவிப்பு

புதுடில்லி, யூலை 2

நாடுதழுவிய முறையில் பரந்த இயக்கம் ஒன்றினைத் தாம் ஆரம்பிக்கவிருப்பதாக உள்துறை அமைச்சராக இருந்து விலக்கப்பட்ட திரு. சரண்சிங் அறிவித்துள்ளார்.

அமைச்சர் பதவியில்இருந்து ராஜினமாச் செய்தபோதிலும் தாம் தொடர்ந்தும் ஆளும் கட்சியில் இருக்கப்போவதாகவும் அவர் கூறியிருக்கிறார். ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் துணைநிற்பவராகத் தாம் இருக்கவிரும்பவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

### நிம்மதி ஏற்பட்டது

தம்மை ராஜினமாச் செய்யுமாறு பிரதமர் திரு. தேசாய் கேட்டுக்கொண்டது தமக்குப் பெரிதும் மனநிம்மதியாக இருந்தது என்றும் அவர் சொன்னர்.

### அஸாம் முதல்வர் வரவேற்பு

உள்துறை அமைச்சரையும், சுகாதார அமைச்சரையும் பிரதமர் விலக்கியதை அஸாம் மாநில முதலமைச்சர் திரு. படுபோட்டி வரவேற்றுள்ளார்.

கட்சிக்குள் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் இந்நடவடிக்கை ஏற்படுத்தும் என்று அவர் கூறினர்.

இது இவ்வாறு இருக்க ஜனதாகட்சியின் பார்லிமெண்டரிக்குழு புதுடில்லியில் இம்மாதம் 15ம் திகதி கூடவிருக்கிறது. (உ)

# "சட்டநடவடிக்கையா? ஜனதா அரசால் முடியாது"

## -- இந்திராகாங். செயலாளர்

புதுடில்லி, ஜூலை 2

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு ஜனதா அரசுக்கு கிடையாது.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. புட்டாசிங் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் நடைபெற இருக்கும் இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் உத்தியோகபூர்வ காங்கிரஸ் இணைப்பு குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் திரு. புட்டாசிங் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். (இ)

# "வியட்னமுக்கு சீன ஆத்திரமூட்டுகிறது ஆபத்தான செயல் இது"

## என ரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை. 2

சீன வியட்நாமுக்கு ஆத்திரமூட்டக்கூடிய நடவடிக்கைகளில்ஈடுபட்டுவருவதாகசோவியத்யூனியன் குற்றம்சாட்டியுள்ளது. சீனவின் இப்போக்கு ஆபத்தானது 'பிராவ்தா' என்ற மாஸ்கோ பத்திரிகை கூறியுள்ளது.

கம்போடியாவுக்குச் சார்பாக நடந்துவரும் சீன- வியட்நாம் கம்போடிய விவகாரத்தில் உண்மையான தீர்வை விரும்பவில்லை, பகைமை உணர்ச்சியையே காட்டுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்றும் 'பிராவ்தா' கூறியுள்ளது. (உ)

# தென் யேமனில்

## ஜனதிபதி சபை தெரிவு

ஏடன், ஜூலை 2

தென் யேமனில் 5 உறுப்பினர்கள் கொண்ட ஜனதிபதி சபை ஒன்று தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

தென்யேமனின் உயர்மக்கள் பேரவையின் அவசரக் கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது என்று ஏடன் வானெலி அறிவித்தது.

தென்யேமன் ஜனதிபதி சலீம் ரொபாயிஅலி படுகொலை செய்யப்பட்டுவிட்டது தெரிந்ததே. (உ)

### ஷா கமிஷன் விசாரணை

புதுடில்லி, ஜூலை 2

நெருக்கடிகால அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் ஷா கமிஷன் மீண்டும் தனது விசாரணைகளை நாளை திங்கட்கிழமை புதுடில்லியில் ஆரம்பிக்கிறது.

### ஏஜண்டுகள் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு மீன் கொள்வனவு செய்வதற்காக நாடு பூராவுமுள்ள சகல மீன்பிடி இடங்களிலும் ஏஜண்டுகளை நிய

(5-ம் பக்கம் பார்க்க)

# 'இந்திரா கைதானல் நாடு கொதித்தெழும்"

## கர்நாடக முதல்வர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை. 2

"இந்திராவின் வாக்குரிமையைப் பறிப்போம் என சில ஜனதா கட்சித் தலைவர்கள் கூறிவருகின்றனர். அவ்வாறு இந்திராவின் வாக்குரிமை பறிக்கப்பட்டால் இந்தியாவே கொதித்தெழும்" என்று கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சேலம் ஜில்லாவில் நடைகாங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திரு. தேவராஜ் அர்ஸ் பேசும்போதே இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;- ஒரு தாயானவள் எப்படிக் குழந்தைகளில் யாருக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்து பராமரிப்பாளோ அந்த தாயார் நிலையில் இந்திரா இருபது அம்சத் திட்டத்தில் பலவீனமான மக்களுக்கு நிவாரணமளித்திருந்தார்.

"இந்திராவைக் கைது செய்தால் நாங்கள் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் போராடுவோம். அவரைக் கைது செய்யும் நாளன்று திரௌபதையைத் துச்சாதனன் துகில் உரித்த போது மகாபாரதத்தில் ஏற்பட்ட முடிவைப் போன்று விளைவுகள் ஏற்படும். இந்திரா காஷ்மீரின் மகள் அவர் கைதானல் சும்மாயிருக்கமாட்டோம் என்று காஷ்மீர் முதல்வர் ஜனப் ஷேக் அப்துல்லா கூறியிருப்பதையும் நன்கு ஜனதா அரசு உணர்ந்தாகவேண்டும்" என்றார். (கெ-உ)

### தேங்காய் திண்டாட்டம்

சென்னை, ஜூலை 2

"பட அதிபர்களினுல் தமக்குக் கொடுக்கப்பட்ட காசோலைகளில், வங்கிகளில் பணமின்மையால் ரூபா 2,00,000 திரும்பியுள்ளது" என்று நடிகர் தேங்காய் சீனிவாசன் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். (கெ-உ)

# இந்திராவுக்கு மணிப்பூர் விசாரணைக்கமிஷன் சம்மன்ஸ்

புதுடில்லி, ஜூலை. 2

நெருக்கடிகால அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த மணிப்பூரில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் திருமதி இந்திரா காந்தி உட்பட சிலரைத் தம்முன் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

திருமதி காந்தி, அவரது மகன் சஞ்சேய் காந்தி, காங்கிரஸ் தலைவர் பிரமானந்தரெட்டி, மாஜி மந்திரி பன்சிலால், ஓம் மேத்தா மாநில மாஜி முதல்வர் துரேந்திரசிங் முதலானேருக்கே கமிஷன் கட்டளை பிறப்பித்துள்ளது. (உ)

# "புதுச்சேரி அரசின் ஓராண்டு சாதனைகள்"

## முதல்வர் இராமசாமி விளக்கம்

புதுச்சேரி, ஜூலை. 2

"ஹரிஜனர்க்கு வீடமைப்புத்திட்டத்தை துரிதமாகச் செயற்படுத்துவது உட்படப் பல அபிவிருத்தித்திட்டங்களை அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழக அரசு புதுச்சேரியில் தீவிரமாகப் பூர்த்தி செய்துவருகிறது."

இவ்வாறு புதுச்சேரி அ. இ. அ. தி. மு. க. அரசின் முதலமைச்சர் திரு. சி. இராமசாமி கூறினர். பதவியேற்று தமது அரசு ஓராண்டு பூர்த்தியானதையொட்டி நிருபர்களுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறி பெருமிதப்பட்டார். "கிராமப்புறங்களில் குடியிருப்பு வசதி, குடிநீர் விநியோகம், விவசாயிகளுக்கு வரிவிலக்கு என்பனவற்றையும் எமது அரசு சீருடன் செயற்படுத்தி வருகிறது" என்றும் சொன்னர் அவர். (உ)

# இந்திராவிஜய துப்பாக்கிசூடு கமிஷன் விசாரணைமுடிந்தது

சென்னை, ஜூன். 2

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழகத்திற்கு விஜயம்செய்தபோது கிண்டியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம்பற்றி விசாரணை செய்த 'சோமசுந்தரம் கமிஷன்' தனது விசாரணையை முடித்துக்கொண்டதாக அறிவித்தது.

விரைவில் கமிஷனின் அதிகார அறிக்கையை தமிழக அரசிடம் சமர்ப்பிக்கும் என்று கமிஷனர் நீதிபதி திரு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த அக்டோபரில் இடம் பெற்ற சம்பவம் குறித்து நவம்பரில் ஆரம்பமான இக்கமிஷன் விசாரணை 62 நாட்கள் நடைபெற்ற போது 135 பேர் சாட்சியமளித்தனர். 440 சான்றுகள் கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டன.

இக்கமிஷன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில், தி. மு. க. தலைவர் திரு. கருணநிதிக்கும் மற்றும் 131 தி. மு. க. வினருக்கும் எதிராக 'இந்திராவைக் கொலை' செய்ய முயன்றதாக நீதிமன்றத்தில் அரசு மற்றுமொரு வழக்கைத் தொடர்ந்ததை அடுத்து இக் கமிஷன் விசாரணைகளை திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் திராவிடக் கழகத்தினரும் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே. (இ)

# ஐ. நா. செயலாளர் லண்டனுக்கும் செல்வார்

நியுயோர்க், ஜூன் 2

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் ஜெனீவாவுக்குச் செல்லும் வழியில் லண்டன் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஓர் விசேடமாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டே அவர் பயணம் மேற்கொள்கிருர். (உ)

### நடிகை லஷ்மி மறுமணம்

சென்னை, ஜூலை. 2

தமிழக பிரபல நடிகை லட்சுமி, இவ்வாரம் நடிகர் மோகனை திருமணம் செய்யவுள்ளார். நடிகை லட்சுமி முன்னர் திருமணமாகி, விவாகரத்துப் பெற்றுக்கொண்ட பின்னர் நடிகர் மோகனை காதலித்துவந்தார் என்று தமிழகப் படவுலகில் பரபரப்பாகப் பேசப்பட்டுவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (கெ-உ)

# பெய்றூட் தென்பகுதியில் உக்கிர சண்டை

லண்டன், ஜூலை 2

பெய்றூட்டின் தென்பகுதியில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சண்டையில் 12 பேர் வரை மாண்டிருக்கலாம் என தெரிகிறது.

இடதுசாரிகளும், வலதுசாரிகளுமே சண்டையில் இறங்கியுள்ளதாகவும் அரபு சமாதானப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இவர்கள் மாண்டதாகவும் கூறப்படுகிறது.

சண்டை உக்கிரமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

# பூட்டோ கட்சி செயலாளர் கைது

லாகூர், ஜூலை 2

முன்னுள் பாகிஸ்தான் ஜனதிபதி சுல்பிகார் அலி பூட்டோவின் மக்கள் கட்சிச் செயலாளர் கலாநிதி ஹசன் பாகிஸ்தான் இராணுவ அரசினுல் மீண்டும் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

ஒருவாரத்திற்கு முன்னர் தான் இவர் கைதாகி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

கலாநிதி ஹஸன் தீவிர இடதுசாரியாவார்.

இவர் பூட்டோ அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்துபின் சோஷலிஸ போக்கை பூட்டோ மீறுகிருர் என்று கூறி பதவியில் இருந்து ராஜினமாச் செய்திருந்தார். (உ)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**வெள்ளிக்கிழமை விரதம்**

**நாகம்ஸ்**
(சுன்ஞகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன் - சுஜாதா
**முத்தான முத்தல்லவோ**

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**Subterfuge**
(Action-Thrill)

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
NORMAN WISDOM in
**ON THE BEAT**
(Full of Comedy) New Print

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்-ராஜசுலோசன
**ராஜமகுடம்**

**லிடோ** போன்: 7692
(யாழ். நகர்)
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

**ராணி** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
நடித்த
**மன்மத லீலே**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ரஞ்சன்-அஞ்சலிதேவி
**நீலமலேத்திருடன்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 4 தினங்கள்
முத்துராமன்-சந்திரகலா-ஸ்ரீவித்யா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**

**REGAL** Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
**PERCY**
Adults only
5-7-78
**SPYS**


# பொலிஸ் வலேயில் பிச்சைக்காரர்

(கொழும்பு)

கொழும்பு நகர வீதிகளில் காணப்படும் சகல பிச்சைக் காரர்களேயும் பொலிஸார் சுற்றி வளேத்துப் பிடிக்கவுள்ளனர்.

இவர்களில் வேலேசெய்யக் கூடியவர்கள் பல்வேறு தொழில்களிலான பயிற்சி முகாம்களுக்கும், வேலேசெய்ய இயலாதவர்களும் வயதானேரும் வேறு நலன்புரி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படவுள்ளனர்.

தச்சுவேலே, மேசன்வேலே போன்றவற்றில் இவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப் படும். புனர்வாழ்வு முகாம்களில் இப்பயிற்சிகள் நடைபெறும். இதற்கான நடவடிக்கைகளே சமூக சேவைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது. (ம)

# தனிப்பனேக்கள்ளருந்துபவர் தவறிவீழ்ந்து மரணம்

(மாவிட்டபுரம்)

தமது சொந்தப் பாவிப்புக்காக ஒரேயொரு பனேயில் மட்டும் கள் சீவி வந்த சீவல் தொழிலாளி ஒருவருக்கு அந்தப் பனேயே எமனுக மாறியதாம். அதிலிருந்து தவறி வீழ்ந்த அவர் பரிதபகரமாக மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

அளவெட்டி அலுக்கை என்னுமிடத்தைச் சேர்ந்த வீரகத்தி சற்குணசிங்கம் (53 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் குறித்து மல்லாகம் பகுதி திடீர்மரண விசாரணே அதிகாரி திரு. எஸ். புண்ணியமூர்த்தி விசாரணே நடத்தியசமயம் காலமானவர் கார் ஒன்றை சொந்தமாக வைத்து வாடகைக்கு விட்டு வந்தமையால் சீவல்தொழிலில் ஈடுபடுவதில்லேயெனவும் தமது சொந்தப் பாவிப்புக்காகமட்டும் ஒரேயொரு பனேயில் கள் சீவி வந்த அவர் சம்பவதினம் அப்பனேயில் ஏறி கள்சீவ முயன்றசமயம் தவறி வீழ்ந்ததாகவும், உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது வழியில் காலமானதாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன.

காலமானவரது மனேவி சரஸ்வதி, கணபதி, கந்தையா, கணபதிப்பிள்ளே இராசரத்தினம் ஆகியோரின் சாட்சியங்களே யடுத்து விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்ஞகம் பொலிஸ் கான்ஸ்டபிள் விஜய விக்கிரம சாட்சிகளே ஆஜர் செய்தார். (உ)

## ஏஜண்டு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க, மீன்பிடித்துறை அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தீர்மானித்திருக்கிருர். மீனவரிடமிருந்து மீனேக் கொள்வனவு செய்யும் இவர்களுக்கு கூட்டுத்தாபனம் 'கமிசன்' வழங்கும்.

கொள்வனவு ஏஜன்டுகள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும் விண்ணப்பப்படிவங்களேக் கூட்டுத்தாபன தலேமையகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் பெறலாமென்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## பிள்ளேக்குப் படிகட்டாதவருக்கு 4 மாதச்சிறை

[வேலணே[

எட்டுமாதகாலமாகப் பராமரிப்புப்பணம் கட்டத் தவறிய ஒருவருக்கு 4 மாதச் சிறைத் தண்டனே விதிக்கப்பட்டது.

கோப்பாய்யைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளே என்பவர் தமது மனைவியை வயதுமகளான பிரியதரிசினிக்கு மாதா மாதம் 50 ரூபா கட்டும்படி ஏற்கனவே நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இத்தீர்ப்பின்படி இவர் 8 மாத காலத்திற்கு 400 ரூபா கட்ட வேண்டிய பாக்கியிருக்கின்றது. இப்பாக்கிப் பணத்தைக் கட்டத்தவறியதினுல் ஊர்காவற்றுறை நீதிவான் திரு. வி. ஜெகசோதி இத்தண்டனேயை விதித்தார். வழக்காளியின்சார்பில் சட்டத்தரணி செல்வி. எஸ். நமசிவாயம் ஆஜரானுர், [அ[

## அரசியல்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்கத்தை வற்புறுத்தவேண்டும். மனிதனே மனிதன் மதித்து வாழப் பழகுதல்வேண்டும். அந்நிலே ஏற்பட்டால் தான் புதிய சமுதாயம் சிறப்படையும்.

### பொருளாதார சிந்தனே

புதிய சமுதாயத்திலே பொருளாதார சிந்தனே அவசியமானது. நாடுகள் இன்று பாரிய பொருளாதரப் பிரச்னேகளே எதிர்நோக்கி நிற்கின்றன. காரணம் என்னவென்ருல் பொருளாதார நிலே பற்றிச் சிந்தியாமல் வாழ்ந்தமையே ஆகும். யாழ்ப்பாணப் பகுதி இன்று ஓரளவு பொருளாதாரத்துறையில் முன்னணி வகிக்கக் காரணம், கல்வியில் ஓரளவு முன்னேறியமையே. இதனேயே தென்னிலங்கை மக்கள் உணர்ந்துவருகிருர்கள். அதன் பிரதிபலிப்புகளே நாம் காணக் கூடியதாக உள்ளது.

''பொதுமக்களே தத்தமது நிலேக்கேற்ப திட்டங்களே வகுத்துச் செயற்படவேண்டும் அப்பொழுதுதான் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களாகிய நாம் உங்களுக்கு உதவ முடியும். இந்த வழியில் என்னுலான பணிகளேச் செய்யத் தயங்கமாட்டேன் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

''புதிய சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் நீங்கி இருத்தல்வேண்டும், சமுதாய ஏற்றத்தாழ்வுகள நீடித்திருக்கு மட்டும் புதிய சமுதாயத்தினே உருவாக்கிக்கொள்ள முடியாது மேலேத்தேச நாடுகள் பொருளாதார, கைத்தொழில்துறைகளில் முன்னேற்றமடையக் காரணமாக இருந்தது தொழில்துறையில் ஏற்றத்தாழ்வுகளேப் புறக்கணித்ததே.'' (இ)

## ஏழாலேயில்இன்று

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி திரு. நா. முத்தையாவுக்கு ஏழாலே மக்கள் பட்டமளித்துப் பாராட்டு நடத்தும் விழா இன்று மாலே ஏழாலே இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் சுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளேயினுல் வழங்கப்பெற்ற பட்டத்தை எதிர்க்கட்சித் தலேவர் திரு. அ. அமிர்தலிங்கம் கையளித்துப் பொன்னுடை போர்த்துவார்.

வித்துவான் மு. கந்தையா தலேமையில் ஆரம்பமாகும் விழாவில் பல பெரியார்கள் ஆசி வழங்குவர். (அ)

# "வருமானம் போதவில்லே மதுப்பழக்கமும் கூடியது"

## குடும்பஸ்தர் தற்கொலே

(மாவிட்டபுரம்)

குடிப்பழக்கமுள்ள நபர் ஒருவருக்கு அவரது வருமானம் குடும்பத்தை நடத்த போதாத நிலே ஏற்பட்டதால் நஞ்சருந்தி தற்கொலே செய்து கொண்டார்.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிளே தம்பிப்பிள்ளே என்னும் 41 வயதுடைய நபரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணே அதிகாரி திரு. நா. தம்பிராஜா நடத்திய சமயம் காலமானவர் திருமணமாகி 4 பிள்ளேகள் உண்டென்றும், மது அருந்துவதில் அதிகமாக ஈடுபட்டமையால் அவரால் தமதுகுடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாது போனதால் மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் விசாரணேயில் தெரியவந்தது.

மரணவிசாரணே அதிகாரி தற்கொலே எனத் தீர்ப்பளித்தார். (உ)

## விசாரணே ஆரம்பம்

(நெல்லியடி)

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க முன்னே நாள் பொதுமுகாமையாளருக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் பற்றிய விசாரணேகள் ஆரம்பமாகியுள்ளன. மேற்படி சங்கத்தில் நடைபெறும் விசாரணேயை கூட்டுறவுத் திணேக்களத்தைச் சேர்ந்த விசாரணே உத்தியோகத்தர் திரு. எப். ஆர். பிச் நடாத்திவருகின்ருர்.

சங்கத்தின் சார்பாக இயக்குனர் சபைத் தலேவர் த. கந்தசாமியும் உப தலேவர் ந. பாஸ்கரனும் ஆஜராகியுள்ளனர். முன்னேநாள் பொதுமகாமையாளர் திரு. சி. தாமோதரம் பிள்ளேக்காக் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. முன்னேநாள் பொதுமுகாமையாளர் திரு. த. இராசேந்திரம் ஆஜராகியுள்ளார். விசாரணேயை விரைவில் முடிப்பதற்கு இருதரப்பினரும் முற்பட்டுள்ளனர். (உ)

கடலட்டை ஏற்றுமதி:

# பண்டத்தரிப்பு சங்கத்திற்கு ரூ. 24,000 இலாபம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம் கடலட்டை ஏற்றுமதி மூலம் கடந்த தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களிலும் 24 ஆயிரம் ரூபாவை நிகர இலாபமாக பெற்றுள்ளது.

இத்தகவலே மேற்படி சங்கத்தின்பொதுமுகாமையாளர் திரு. எஸ். சண்முகசுந்தரம் தெரிவித்தார். இச்சங்கம் சிங்கப்பூருக்கு கடலட்டையை கடந்தபல வருடங்களாக ஏற்றுமதிசெய்து வருவதன் மூலம் பெரும்தொகையான அந்நிய செலவாணியை நமது நாட்டிற்கு மீதப்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சாவகச்சேரியில் சுகாதாரவார விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சுகாதார வார விழா இன்று முதல் 9 ம் திகதிவரை சாவகச்சேரியில் கொண்டாடப்படும்.

7 ம் திகதி காலே தேவேந்திர படமாளிகையில் இதுபற்றிய கருத்தரங்கு நடைபெறும். பல ஆசிரியர்களும், அரசாங்க அதிகாரிகளும் பங்குபற்றும் இக்கருத்தரங்கைத் தொடர்ந்து மாலேயில் டிறிபேக்கல் லூரியில் கலேவிழா நடைபெறும். பேச்சு, பாட்டு, விவாதம், நடனம், நாடகம், கும்மி முதலியன கலேவிழாவில் இடம் பெறும். விநோத உடைப் போட்டியும் இடம் பெறும். பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கலந்துகொள்வார். திருமதி நவரத்தினம் பரிசில்களே வழங்குவார். (ச-அ)

## பாராட்டுவிழா

(திருநெல்வேலி)

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளேக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டதையொட்டி இம்மாதப் பிற்பகுதியில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் பாராட்டு விழா ஒன்றினே நடத்தவிருக்கிறது. ]உ]

## கம்யூ.கட்சி 35-வது ஆண்டுவிழா

# தொகுதிகள் தோறும் கருத்தரங்குகள் நடத்துவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட் மாஸ்கோ சார்பு கட்சியின் 35-வது ஆண்டு பூர்த்திவிழா வையொட்டி யாழ் மாவட்டத் தொகுதிகள் தோறும் கருத்தரங்குகளும், சிறப்பு சொற்பொழிவுகளும் நிகழ்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கொண்டாட்டத்தை நடாத்துவதற்கு அமைக்கப்பட்ட விசேட குழு கூடி, பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லாத் தொகுதிகளிலும் கட்சியின் வரலாறு இன்றைய அரசியல் நிலை, தொழிலாளர், விவசாயிகள், வாலிபர் பிரச்னை சம்பந்தமாக கட்சியின் கொள்கைகளை விளக்கி கருத்தரங்குகள், சிறப்புச் சொற்பொழிவுகள் ஜூலையில் நடத்துதல்.

கட்சி வளர்ச்சி, நிதிசேகரிக்கும் வேலையில் கட்சித் தொண்டர்கள் ஜூலை மாதம் முழுவதும் ஈடுபடுதல்.

கிளிநொச்சிப் பகுதியில் வாழும் விவசாயிகளை எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான போராட்டத்தை நடாத்துவதற்கு அப்பகுதி விவசாயிகளுடன் ஜூலை 14ம் 15ம், 16ம் திகதிகளில் கட்சித் தொண்டர்கள் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

## "பஸ்ஸு"க்காக பிரயாணிகள்

# கால்கடுக்க நிற்கையில் வாடகைக்கு விடுவதா?"

(பண்டத்தரிப்பு)

பஸ்களை இ. போ. ச. தனிப்பட்ட திருமண வைபவங்களுக்கு வாடகைக்கு விடுவதை நிறுத்துமாறு அளவெட்டி பஸ் பிரயாணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

'பஸ்தரிப்பு நிலையங்களில் பிரயாணிகள் பஸ்சுக்காக நீண்டநேரமாக 'கியூ'வரிசைகளில் காத்து நிற்கும் தற்போதைய நிலையில் பஸ்வண்டிகளை தனியார் திருமண வைபவங்களுக்கும், மற்றைய பிற வைபவங்களுக்கும் பிரத்தியேக வாடகைக்கு விடும் வழக்கத்தை நிறுத்த வேண்டும், என்று அளவெட்டி பஸ் பிரயாணிகள் சங்கம் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபைத் தலைவரை ஒரு மகஜர் மூலம் வேண்டியுள்ளது. இம்மகஜரின் பிரதிகள் கோண்டாவில் இ. போ. ச. டிப்போ அத்தியட்சருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## யாழ். சென்ஜோன்ஸ் கொழும்பில் மோதும்

(அளியாலை)

அகிலஇலங்கை கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட மாணவர்களின் கிரிக்கட்போட்டியில் வடமாகாணத்தில் சாம்பியனாக தெரிவுசெய்யப்பட்ட யாழ். பரியோவான் கல்லூரிக் கோஷ்டிக்கும், மேற்குமாகாணத்தில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் கொழும்பு சென். ஜோசப் கல்லூரிக்குமிடையிலான போட்டி இன்றும் நாளையும் கொழும்பு சுகாதார இலாகா மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. (இ)

# கொழும்பில் ஈ.வெ.ரா.வின் நூற்றுண்டு விழா

(கொழும்பு)

ஈ. வே. ரா. பெரியாரின் நூற்றுண்டு விழாவினைக் கொழும்பில் செப்டம்பர் மாதம் சிறப்பாகக்கொண்டாடுவதென்று கலைஞர்கருணாநிதி பொதுப்பணிமன்றம் முடிவு செய்துள்ளது.

தமிழகத்திலிருந்து சிறப்புச் சொற்பொழிவாளர் ஒருவரை அழைப்பதெனவும் செயற்குழு முடிவு செய்துள்ளது.

பின்வருவோரைக்கொண்ட விழா அமைப்புக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. விழாக்குழுத்தலைவர் சிறப்பு மலர் ஆசிரியர் திரு. க. நவசோதி, செயலாளர்; எஸ். பி. பாண்டியன், விளம்பர, நன்கொடை பொறுப்பாளர்; திரு. ந. சந்திரசேகரன், அமைப்புக்குழுவினர் திருவாளர்கள்: ந. வீரசிங்கம், மா. குலமணி அரசரத்தினம், எஸ். அழகுராஜா, எஸ். சி. தியாகராஜா, ஏ. எப். செல்வராஜா, எச். பத்மநாதன், கே. ஆர். கணேசன், எஸ். முத்துக்கிருஷ்ணன், ஜனாப் வை. சாப்தீன், திரு. எம். காசிநாதன், திரு. எஸ். விஸ்வநாதன், ம. சு. சாம்பசிவம், எஸ். ரி. சிவராசன், ரு. செல்வச்சந்திரன், உசேன் பாரூக் ஆகியோர். (உ)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு செல்லக் கதிர்காம வருடாந்த மகோற்சவம் 5ந் திகதி முதல் ஆரம்பமாகி, 20ந் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். பல ஆண்டுகளாக அடியார்களுக்கு அற்புதங்கள் நிகழ்ந்துவரும்இவ்வாலயம், பலராலும் போற்றப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (கெ)


## நைலோன் மீன்பிடி வலைகள்

இதோ மீண்டும் வந்துவிட்டது உலகப் புகழ்பெற்ற ஜப்பானிய ஹொராட்டா கம்பனியாரின் மீன்பிடி வலைகள். எம்மிடம் கையிருப்பில் சிறிதளவே இருப்பதால் உங்கள் தேவைக்கு முந்துங்கள்.

**லைடன் ரேடர்ஸ்**
சேகரம் பில்டிங்,
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

9698


# "கர்நாடக இசையை நாம் வளர்க்கவேண்டும்"

## பாராட்டு விழாவில் நவம்

(யாழ்ப்பாணம்)

"கர்நாடக இசையை வளர்க்கவேண்டும். அது தமிழ்ப் பண்பாட்டை விளக்குவதாகும். நாங்கள் மொழி உரிமையுடன் மட்டும் நிற்கவில்லை. கலை கலாச்சாரம் பண்பு ஆகியவற்றையும் பேணிப் பாதுகாத்துவருகின்ருேம்"

சங்கீதபூஷணம் இ. விஞசித்தம்பிக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன்கோவில் முன்றலில் பிரம்மஸ்ரீ அ. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

சாவச்சேரி எம். பி. மேலும் பேசுகையில், தனியே இசை ஆசிரியர்களை மட்டும் நாம் உருவாக்கினல் போதாது என்றும் உண்மையான இசையை ரசிக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று கூறினர்.

கே. எம். பஞ்சாபிகேசன் குழுவினரின் மங்களஇசையுடன் விழா ஆரம்பமானது. இசைமணி வே. நடேசன், சங்கீதபூஷணம் குமாரசாமி ஆகியோர் பாராட்டு வாழ்த்துப்பா பாடி வழங்கினர். கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையினல் எழுதப்பட்ட ஆசியுரை, பண்டிதர் முருகு தம்பையாவினல் வாசித்து அளிக்கப்பட்டது.

விழாச்சபைத்தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியம், 'பொற்கிளி' அடங்கியகனகமாலையை சங்கீதபூஷணத்திற்கு சூட்டிக் கௌரவித்தார். மகாதேவ ஆசிரமத்தலைவர் ஸ்ரீமத் வடிவேலுசுவாமிகள் பொன்னுடை போர்த்தி, 'சிவநெறிச் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கி வாழ்த்தினர். இசைமணி மோகனம்பிகை கணேசன், இசைமணி பூமணிஇராசரத்தினம் ஆகியோர் இசை விருந்தளித்தனர்.

நீதிபதி க. ஞானச்சந்திரன், ஆசிரியர் ச. கைலாசபிள்ளை, வித்துவான் மு. சபாரத்தினம், திருமதி உமையம்மா சிவசம்பு ஆசிரியர் ஏ. பி. செல்லையா, திரு. க. சி. ஏரம்பமூர்த்தி, சைவப்புலவர் கு. வி. மகாலிங்கம், திரு. சி. க. மயில்வாகனம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள். (க)

## ஜனதா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவியிலிருந்து ராஜினுமா செய்ததன்பின்னர், பத்திரிகை நிருபர்கள் மத்தியில் திரு. ரவிராஜ் பேசுகையில், திருவாளர்கள் சரண்சிங்கையும், ராஜ்நாராயணையும் வெளியேற்ற வேண்டுமென்று திடுதிப்பென்று முடிவு செய்யவில்லை என்றும், முன் கூட்டியே திட்டமிடப்பட்ட செயல் இது என்றும் கூறினர்.

"எனது ராஜினுமா கடிதத்தை திரு. சந்திரசேகருக்கு அனுப்பிவிட்டேன். கட்சிக்குள் தலைதூக்கிய நெருக்கடி இன்னும் தணியவில்லை. முக்கிய பதவியிலிருப்பவர்களை அல்லது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் வெளியேற்றப்படலாம். இதற்கான திட்டம் இருக்கிறது. திரு. சரண்சிங், திரு. ராஜ்நாராயண் விஷயத்தில், கட்சித் தலைவர்கள் சர்வாதிகார போக்குடன் நடந்துவிட்டனர். அவர்களை வெளியேற்ற முன்னர், அவர்களிடம் விளக்கம் கோரியிருக்கலாம்" என்று கருத்துவெளியிட்ட திரு. ரவிராஜ்,

"ஜனதாவில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸ் இரண்டும்இணையத் தொடங்கிவிட்டன" என்று கூறினர்.

இதற்கிடையே புதுடில்லி வந்திருக்கும் ஹரியானு முதலமைச்சரும், பஞ்சாப் முதலமைச்சரும் நேற்று மாலை ஜனதா தலைவரையும் பின்னர் பிரதமரையும் சந்தித்தனர். இதனைத் தொடர்ந்து உயர் மட்டத்தில் பல கூட்டங்கள் இங்கு நடைபெற்றன.

## தலைமையாசிரியர் கழுத்து வெட்டிக்கொலை!

(கொழும்பு)

உன்னஸ்கிரிய பொலிஸ்பகுதியைச் சேர்ந்த குலரத்ன (வயது 35) என்றபாடசாலைத் தலைமையாசிரியர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது உடல் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் வீட்டிலிருந்து 200 யார் தொலைவில் கிடக்கக் காணப்பட்டதாம்.

மர்மக் கொலைஞனைப் பொலிசார் தேடிவருகின்றனர். (உ)

## சரண்சிங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பிரச்னை ஏற்படமுடியும்?" என்று அவர் வினவினர்,

திருமதி காந்திமீது நடவடிக்கை எடுப்பது உள்துறை அமைச்சகத்தைப் பொறுத்த விடயம் என்று கூறிய அவர், "சரண்சிங் ராஜினுமா திருமதி காந்திக்கு வலுவூட்டும் என்று நான் கருதவில்லை" என்ருர்.

இவர்களின் ராஜினுமாவால் சில மாநிலங்களில் சிக்கல் ஏற்பட இடமில்லையென்றும் பீகார் உத்தரப்பிரதேஷ் முதலமைச்சர்கள் இதுபற்றி எதுவும் பாதிப்பு ஏற்படும் வகையில் யோசனை தெரிவிக்கவில்லையென்றும் சொன்னர்.

# "விளையாட்டு நற்பண்பினை வளர்க்கிறது"

– தி. மாணிக்கவாசகர்

(யாழ்ப்பாணம்)

'முடியுடை வேந்தராகிய சேர, சோழ, பாண்டியர் தமிழ் பண்பினைப் பேணிவளர்த்ததுபோல் நீங்களும் சிறந்த விளையாட்டுப் பண்பினை பேணி வளர்ப்பதைக்கண்டு பெருமிதமடைகிறேன்'

வரணி மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாநில கல்வி அதிபதி திரு. த. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர்.

அதிபர் பண்டிதர் பொ. கந்தையினர் தலைமையில் நடந்த இப்போட்டியில் வணபிதா ஜெயநேசன், மாணவரின் அணிநடை மரியாதையை ஏற்றுக் கொண்டார். வட்டார கல்வி அதிகாரி திரு. இராசநாயகம், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

திரு. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது: பெருந்திரளான பெற்ருேரும், அநேக பழைய மாணவரும் இங்கு சமுகமளித்திருப்பதுபோல் வேறு எங்கும் காணவில்லை. 800 மீற்றர் ஓட்டத்தில் 47 பழைய மாணவர் ஒரேஅணியில் ஓடியது ஒரு அதிசயக் காட்சியாக இருந்தது. பூசல் எதுவுமின்றி அவர்கள் பண்பாக நடந்து கொண்டது அதிபரிடம் அவர்கள் கொண்ட மதிப்பினைக் காட்டுகிறது. அதிபரின் நிர்வாகத் திறமையை பாராட்டுகிறேன்.

திரு. இராசநாயகம் பேசும் போது, இவ்வித்தியாலயம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவதுபோல் கல்வித்துறையிலும் எதிர்காலத்தில் சிறந்து விளங்கக் கூடிய சகல வசதிகளும் இங்குண்டு என்ருர்.

சேரன் இல்லம் 291 புள்ளிகளை எடுத்து முதலாவது இடத்தையும், பாண்டியன் இல்லம் 215 புள்ளிகளை எடுத்து இரண்டாம் இடத்தையும், சோழன் இல்லம் 197 புள்ளிகளை எடுத்து மூன்ரும் இடத்தையும் பெற்றன. திருமதி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினர். (க)

## சடலம் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

சுமார் 60 வயது மதிக்கத்தக்க அடையாளம் காணப்படாத வயோதிபரின் சடலமொன்று யாழ். பெரிய ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தலையிலும் முழங்காலிலும் காயங்களுடன் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிக்கருகில் காணப்பட்ட இவர் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானர்.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்தி பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். ( )

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் கருத்தரங்கு

(திருநெல்வேலி)

வடமாகாண சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிக் கருத்தரங்கு இம் மாதம் 8ம் திகதி காலை பருத்தித்துறை மெதடிஸ் உயர்பெண்கள்பாடசாலையில் ஆரம்பமாகவிருக்கிறது. வடபிராந்திய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் திரு. ஈ. பி. இராசையா, யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னுண்டோ, அ. இ. சென். ஜோனஸ்அம்புலன்ஸ் பிரதிநிதிக் முதலானேர் இதில் கலந்து கொள்வர்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திருவாளர்கள் வி. ரி. நடராஜா, எஸ். பி. சிவசுப்பிரமணியம், ஆர். கந்தசாமி, எஸ். செல்லையா, எஸ். பி. சிவபாதம், திரு. சி. சுப்பிரமணியம் முதலியோர் கலந்து கொள்வர்.

இக் கருத்தரங்கில் பல முக்கிய விஷயங்களும் ஆராயப்படவுள்ளனவாம். (உ)

## ஐம்பது ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பெற்று உரியமுறையில் பூர்த்திசெய்து, இம்மாதம் பதினேராம் திகதிக்கும் பதினெட்டாம் திகதிக்குமிடைப்பட்ட காலத்தில் கையளிக்க வேண்டும் என்றும் அடுத்த மாதம் 8ம் திகதி முதல், தபால் அலுவலங்கள் மூலமாக ஐம்பது ரூபா பணம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பத்து லட்சம் படிவங்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று திட்ட அமுலாக்க அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Eelanaadu - Telephone: 389 - Registered as News paper in Sri Lanka.